


Aulmighu Sri Ranganathaswamy Temple
Srirangam, Tiruchirapalli



3

# Part 3



Therazhundhur
Shri. U. Ve. K. Sriraman
Bhattacharriyar Swamy

# PANCHARATRA AGAMAM

## Scope of this manual

1. This manual explains the code of practices recommended in the Pancharatra Agamam
2. The importance of the RajaGopuram and the directions in which they are permitted
3. The role of the temple priests including Sthalasthar / Archagars / Bandaris in the conservation process
4. Importance of Veda pada salas – Training. Leads to conservation
5. Construction of Temples / Gopurams and their conservation.
6. Importance and the location / directions of the RajaGopuram
7. Temple as the body of the Deity
8. RajaGopuram conservation

DRAFT



Shree Manavala Maamunigal Sannidhi
Shree Pundarikatcha Perumal Temple - Thiruvellarai



# Contents


**ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் - அறிமுகம்**

3.1 ஆகம ஆலயங்களும் - வர்ணாஸ்ரம தர்மங்களும் 273

3.2 இந்த ஆலயங்களின் வகைகள் 276

3.3 ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் பற்றிய சிறப்புகள் 279

3.4 ஏதோ ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமே பிழைப்பதற்காக ஆலயங்கள் கட்டப்படவில்லை 286

3.5 இவ்வாகமத்தின் சரித்திரப்புகழ் 289

3.6 இந்த ஆகமம் கூறும் அர்ச்சகர்களின் பெருமைகளும், நடக்கவேண்டிய நெறிமுறைகளும் 292

3.7 ஸ்ரீபாஞ்சராத்ரம் கூறும் பரிசாரகர்கள் பெருமைகள், நடக்கவேண்டிய நெறிமுறைகள் 296

3.8 திவ்யப்ரபந்தம் ஓதக்கூடிய அத்யாபகர்கள் நியமனம் மற்றும் அவர்களது கடமைகள் 300

3.9 ஆலயத்தை சுற்றி பல கோபுரங்கள் அமைப்பதற்கு ப்ரமாணம் 311

3.10 கோபுராதிகள் அபிவ்ருத்தி அடைய ப்ரார்த்தனை 317


DRAFT
V.S.Jayabal

# ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் - அறிமுகம்

## 3.1. ஆகம ஆலயங்களும் - வர்ணாஸ்ரம தர்மங்களும்

ஆகமம் என்ற சொல்லுக்கே ஆசாரம் என்றும், தர்மம் என்றும் பற்பல பொருள் கூறுவர்கள். இந்த ஆசாரமானது ஒவ்வொரு வருணத்தவருக்கும் உண்டு. அந்தணர், க்ஷத்ரியர், வைஸ்யர், சூத்ரர் என்று அழைக்கப்படுவர்கள், அவரவர்களுக்கான செயல்களைக் காப்பதுதான் தர்மம் எனப்படும்.

இந்த தர்மமானது முன்புகூறிய முதல் வருணத்தவர்களுக்கு ப்ரும்மசர்யம், க்ருஹதர்மம் (இல்லறம்) வானப்ரஸ்தம் எனும் காடுவாழ் அறம், சன்னியாசம் எனும் அறம்.

இதிலே இல்லறத்தில் இருந்து கொண்டு ப்ரும்மசாரிகளையும், சன்னியாசிகளையும் காத்தல் அவர்களுக்கு உணவிடல், வேதங்களையும், அதன் உட்பொருட்களையும் ரக்ஷித்தல் என்னும் பற்பல தொழில்கள். அதனால் தான் தமிழ் புலவர்கள் 'அந்தணர் என்போர் அறவோர்' என்றும், 'இல்லறமல்லது நல்லறமன்று' என்றும் கூறினர்கள்.

இதே தர்மம் க்ஷத்ரியர்களுக்கு ப்ரும்மசர்யம், இல்லறம், நாட்டைக்காக்கும் தர்மம் என்று கூறக்கூடிய நாட்டையும் வீட்டையும் காத்து முன் கூறியவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல்.

DRAFT
V.S.Jayabal

அடுத்து வைஸ்யர்கள் என்பவர்களுக்கு வீட்டையும், அதற்கு உபயோகப்படுவதானதும், அவசியமானப் பொருள்களை வாங்கி, வரவழைத்து முன்பு கூறியவர்களோடு நல்வழியில் நடத்தல் இவர்களது தர்மம்.

அடுத்து நான்காம் வருணத்தவர் என்று கூறக்கூடியவர்கள் முன்பு கூறியவர்களோடு நல்லவிதத்தில் பழகியும், அவர்களது வ்யாபாரத்திற்கான பொருட்களை உற்பத்திசெய்து அதன்மூலம் நன்மைகளைப் பெறுதல் இவர்களது தர்மம்.

இந்த தர்மம் செழித்தால் நாடு நலம்பெரும். குறைந்தால் பற்பல இன்னல்கள் ஏற்படும். இதுதான் ஆகமங்கள் கூறும் தர்மங்கள்.

இனி ஆலயம் என்பது முன் கூறிய நான்கு வர்ணத்தவரும் ஒன்று கூடி மனம் விட்டு பேசி தன்னுடைய குறை நிறைகளை முறையிடக்கூடியதும் மன நிறைவு பெறக்கூடியதுமான இடம். இதுதான் ஆன்ம லயம் எனும் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தின் தோற்றத்தைக்கொண்டே இந்த தேசத்து மன்னர்கள், முன்புகூறிய நான்குவருணத்தவரின் செயல்களை அறிந்துகொள்ளலாம்.

உதாரணத்திற்கு இங்குள்ள அரசர்கள் மனம் நிம்மதியாக இருந்தால்தான் அந்த தேசம் நன்றாக இருக்கும். ஆதாரம் ஸ்ரீராமாயணம் அயோத்யாகாண்டம் 67 அத்யாயத்தில் காணலாம்.

DRAFT
V.C Jayabal

அதற்கும் அடுத்து இந்த அரசனானவன் தர்மசிந்தனையோடும், (அறத்தொடுநின்று), தர்மவழியில் (அர்த்தம் என்று கூறப்படுவது) பொருள் சேகரித்தல் அதையும் தர்மவழியில் செலவழித்தல் போன்றவைகளைச் செய்பவனாகவும், அதன் மூலம் தனக்கும், தன் தேசத்துமக்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுத் தருபவனாகவும் (காம்யம்) இந்நிலவுலகில் மிகவும் சௌகர்யமாக வாழ்ந்து முடிவில் மோக்ஷம் எனும் தர்மவழியை அடைபவனாக இருந்து நான்கு பேறுகளையும் பெறக்கூடியவனாகவும், பெற்றுத்தருபவனாகவும் இருத்தல்வேண்டும் என்று ஸ்ரீபாஞ்சராத்ரம் கூறுகிறது. ஆதாரம் அனிருத்த ஸம்ஹிதை.

தேசமக்கள் உடல் என்றால் அதில் உள்ள ஜீவன் எனும் ஆன்மா அரசன் எனப்படுவான். ஜீவனும் உடலும் ஒழுங்காக இருந்தால்தானே தேகம் எனப்படும். இதில் ஏதோ ஒன்று குறையாக இருந்தாலும் அது தேக ஆரோக்யத்திற்குக்கேடு. அதுவே தேசத்திற்கும் கேடு விளைவிக்கும்.

ஆக உடல் எனும் மக்களும், ஜீவன் எனும் அரசனும் ஒரு இடத்தில் கூடி, தன்னை வழிநடத்தக்கூடிய எம்பெருமானைத் தொழுவதற்குக்கட்டிய இடமே ஆலயம் எனப்படுகிறது.

## 3.2. இந்த ஆலயங்களின் வகைகள்

இந்த ஆலயங்களிள், எம்பெருமான் தானே ஏற்படுத்திக்கொண்ட இடம் 'ஸ்வயம்வ்யக்தம்' எனப்படும். தேவர்களாலும், மஹாலக்ஷ்மியென்கிற தேவிகளுக்காக ஏற்படுத்திய ஆலயம், 'திவ்யம்' என்பது.

ஸித்தர்கள், மஹரிஷிகள் போன்றவர்கள் தன்னுடைய தவ வலிமையால் ஏற்படுத்திய ஆலயம் 'ஸைத்தம்' என்றும், 'ஆர்ஷம்' பொருள் படக்கூடிய சித்தாலயம். மனிதர்கள் மற்றும் அரசர்கள் தன்னுடைய மன நிம்மதிக்காக ஏற்படுத்திய ஆலயம் 'மானுஷம்' என்பது.

முதலில் கூறிய நான்கும் மிகவும் உத்தமமானதும், உயர்ந்ததான பொருட்களைக்கொண்டும் கட்டப்பட்ட ஆலயங்கள். கடைசியில் கூறிய மனிதர்களால் கட்டப்பட்ட ஆலயம் மத்யம ஆலயம் எனப்படும்.

இந்த ஆலயத்திலேயும் எம்பெருமான் தானே நேரிலோ, கனவிலோசென்று எனக்கு இதுபோல் ஆலயம் வேண்டும் என்று கேட்டு அதன்மூலம் நாட்டு மக்கள் நன்மை பெறவேண்டும் என்று கூறி கட்டப்பட்ட ஆலயம் மத்யமோத்தம ஆலயம் எனப்படும்.

அதற்கும் அடுத்து ஆலயம் கட்டுவதாக ஆரம்பித்து ஏதோ ஒருகாரணங்களால் நின்றுபோய்விடுவது. (உதாரணம் திருஅரங்கம் ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில்) பின்னால்

DRAFT
V.S.Jayabal

வந்தவர்கள் அதனைப்பூர்த்திசெய்வதும் அதமோத்தம ஆலயம் எனப்படும்.

ஆரம்பித்த ஆலயம் முடிவுபெறாமலேயே விட்டுவிடுவது அதம மத்யமம் (உதாரணம் திருவெள்ளரை). ஆரம்பித்த ஆலயத்திற்கு மிகப்பெரிய திட்டம் வகுத்துவிட்டு முடிவில் சிறியதாக ஒரு ஆலயம் கட்டி மற்றைய பொருள்களை சுயநலத்திற்கு உபயோகப்படுத்துவது அதமாதமம் எனும் ஆலயம்.

அடுத்து கிராமங்கள் வருவதற்கு முன்னமேயே ஆலயத்தைக்கட்டிவிட்டு அந்த வீதிகளில் முன்புகூறிய நான்கு வருணத்தவரும் வாழ்வதற்கு வீடு முதலான வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்து அவர்கள் அரசனையும், அரசர்க்கு அரசனான எம்பெருமானையும் அண்டி வாழ வழிசெய்வது உத்தமோத்தம ஆலயம். (உதாரணம் திரு அரங்கம்)

இதுபோன்ற உத்தமாலயங்களின் வீதிகளிலே முன்புகூறிய மனிதர்களின் கனவிலே வந்து எம்பெருமான் தனக்கு ஒரு ஆலயத்தைகட்டி அதற்கு மஹனீயர்களைக்கொண்டு பூஜைகளைச்செய்துகொள்வது மத்யம ஆலயம்.

ஏதோ ஒரு மூலையில் தனக்கு என்று ஒரு வீதிகளிளோ, பூஜா முறைகளோ இல்லாமல் உலகை ரக்ஷிப்பதற்காக எம்பெருமானுக்கு ஆலயம் கட்டுதல் அதம ஆலயம் எனப்படும்.

DRAFT V.S.Jayabal

எவ்வாறாக இருந்தாலும் முன் கூறிய உத்தம ஆலயங்களில் ஏதோ ஒரு காரணத்தால் கட்டிய திருப்பணிகள் பாதியிலேயெ நின்று போய் விடும். அல்லது காலாந்தரத்தில் உடைந்து வீழ்ந்திருக்கலாம். அல்லது இடிமின்னல் போன்றவை தாக்கி பாதி உடைந்தும், பாதி உடையாமலும் இருக்கலாம். அல்லது வேற்று மதத்தினராலோ, அரசர்களாலோ இடித்தும், களவாடப்பட்டும் இருக்கலாம்.

அதற்கும் அடுத்து கட்டும்போது மீதியை கட்டவிடாமல் அவரது காலக்ரமங்கள் முடிந்திருக்கலாம். பின்னால் வந்தவர்களுக்கு பொருள் வசதி இல்லாமல் விடப்பட்டிருக்கலாம். அல்லது க்ரஹங்கள், நக்ஷத்ரங்கள் கூடிவராமல் செயல்பாடு நிறுத்தப்பட்டுவிடுவதும் உண்டு. இவற்றையெல்லாம் சரிசெய்வதற்கான விதிமுறைகளையும், ஏற்படும் புண்ணிய பலன்களையும், ஆசார, தர்ம, ஆகமம் என்று கூறக்கூடிய ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் கூறுகிறது.

DRAFT
V.S.Jayabal

## 3.3. ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் பற்றிய சிறப்புகள்

இந்த ஆகமம் முதலில் ஐந்து சிஷ்யர்களான் அநந்தன், கருடன், விஷ்வக்ஸேனர், ப்ரும்மா, ஈஸ்வரன் என்னும் ஐந்து சிஷ்யர்களுக்கு ஐந்து இரவு, பகலாக பரமபதத்திலிருந்து உபதேசிக்கப்பட்டது.

மேலும்

**ஸார்த4கோடிப்ரமாணேநானுஷ்டுபா4 ச2ந்த3ஸா ரமே.**

**வேத3வன்நித்யமேதச்ச மல்லோகே நித்யஸூரய: .**

**ஆமனந்தி ஸதா3 ப4க்த்யா மனஸா பூஜயந்தி ச . (ஸ்ரீ:)**

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமமென்பது ஏகாயனவேதத்தின் ஸாரமென்றும், வேதங்களின் தலைமையான வேதமென்றும் கூறப்படுகிறது. அவ்வாறு கூறப்பட்டுள்ள ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம், சுமார் 1.5 கோடி ஸ்லோகங்களால் ஆன தொன்மையான பூஜாமுறைகளைக் கொண்டது என்றும், மேலும் அதுவே 108, 1008 ஸம்ஹிதைகளாகப் பிரிந்துள்ளது. அவ்வாரான ஸம்ஹிதைகளில் மிகமுக்கியமான ஸ்ரீப்ரஸ்ன, பாத்ம, ஈஸ்வர, பாரமேஸ்வர ஸம்ஹிதைகளிலிருந்து சில விளக்கங்களைக் காணலாம்.

எம்பெருமானின் ஐந்து ஆயுதங்களுக்கும் மற்றும் ஐந்து ஆயுதங்களின் அம்சமாகத்தோன்றிய மஹாமுனிவர்களுக்கும் உபதேசிக்கப்பட்டது. ஈஸ்வர ஸம்ஹிதை (21அ 518 & 33அ).

DRAFT
S.Jayabal

அவர்கள் தாங்கள் மஹரிஷிகளாக அவதரித்து உலகில் உள்ள ஜீவகோடிகள் நல்வாழ்வு வாழவும் முடிவில் அந்தமிலாப்பேரின்பமான வைகுந்தவன்போகத்தை அடையவும் என்னவழியென்று ப்ரும்மனிடம் கேட்க ப்ரும்மாவும் எம்பெருமானை அடைவதற்கு திருவாராதனம் என்னும் மார்க்கமே உயர்ந்தது என்று கூறுகிறார். அந்த திருவாராதனமென்னும் விஷயத்தை தாங்களுக்கு உபதேசிக்க வேண்டும் என்று வேண்டி நிற்கிறார்கள்.

அவரும் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் நீங்கள் த்வாதசாக்ஷரம், அஷ்டாக்ஷரம், போன்ற மந்த்ரங்களை தவம் செய்தீர்களாகில் கிடைக்கும் என்கிறார். அவர்களும் ப்ரும்மாவிடமிருந்து பஞ்சஸம்ஸ்கார தீக்ஷையைப் பெற்றுக்கொண்டு அம்மந்த்ரங்களை உபதேசமாகப்பெற்று பற்பல்லாயிர வருடங்கள் கடுமையாக தவமியற்றி எம்பெருமானிடமிருந்து பரமபததிலிருந்து உபதேசமாகப் பெற்றார்கள்.

DRAFT
V.S.Jayabal

1. சாண்டில்யமாமுனிவரென்னும் மஹரிஷி பௌண்ட்ரவர்தனமென்னும் திருநாராயணபுரத்தில் (மேல்கோட்) தவமியற்றி எம்பெருமானிடமிருந்து ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை உபதேசமாகப் பெற்றார். இவர் திருவாழியென்னும் சக்ராயுதத்தின் அம்சம்.

2. தோதாத்ரிசிகரமென்னும் வானமாமலையில் ஔபகாயந மாமுனிவர் தவமியற்றி எம்பெருமானிடமிருந்து ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை உபதேசமாகப்பெற்றார்.

இவர் பாஞ்சஜன்னியமென்னும் சங்காயுதத்தின் அம்சம்.

3. அநந்தபுரமென்னும் திருவந்தபுரத்தில் மௌஞ்ச்யாயநரென்னும் மஹரிஷி தவமியற்றி எம்பெருமானிடமிருந்து ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை உபதேசமாகப் பெற்றார். இவர் கௌமோதகீயென்னும் கதாயுதத்தின் அம்சம்

4. ம்ருகஸ்தலமென்னும் ஸ்ரீமுஷ்ணக்ஷேத்ரத்தில் கௌசிகரென்னும் மாமுனிவர் தவமியற்றி எம்பெருமானிடமிருந்து ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை உபதேசமாகப்பெற்றார். இவர் சார்ங்கமென்னும் வில்லாயுதத்தின் அம்சம்

5. ஸாலக்ராமசிகரமென்னும் முக்திநாத க்ஷேத்ரத்தில் பாரத்வாஜமஹரிஷி தவமியற்றி எம்பெருமானிடமிருந்து ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை உபதேசமாகப்பெற்றார். இவர் நாந்தகமென்னும் (கத்தி) ஆயுதத்தின் அம்சம்.

DRAFT
V.S. Jayabal

*ஸூத3ர்ஶனாத்3யா: ஹேதீஶா: பஞ்சப்3ரஹ்மர்ஷி ரூபத: |

ஸமுத்பன்னா: க்ஷிதிதலே பௌண்ட்3ரவர்த்4னஸ்த2லாதி3ஷு | 5

*பஞ்சாயுதா4ம்ஶாஸ்தே பஞ்சஶாண்டி3ல்யாஸ்ஸௌபகா3யன:|

மௌஞ்ஜ்யாயன:கௌஶிகஶ்ச பா4ரத்3வாஜஶ்ச யோகி3ன:| 6

பஞ்சாபிப்ருத2கே3கைக தி3வாராத்ரம் ஜக3த்ப்ரபு4:|

அத்4யபயாமாஸ யதஸ்ததஸ்தன்முனிபுங்க3வா:। 7

*ப4க3வச்சா2ஸ்த்ரதத்வஜ்ஞும் ப4க3வத்பாத3 ஸம்ஶ்ரிதம்।

வந்தே3 ஶாண்டி3ல்யமாசார்யம் பௌண்ட்3ரவர்த்4ன ஸ்த2லோத்3

ப4வம்। 8

*ப4க3வச்சா2ஸ்த்ரதத்வஜ்ஞும் ஔபகா3யன தே3ஶிகம்।

தோதாத்3ரிஸம்ப4வம் வந்தே3 வாஸுதே3வ பதா3ஶ்ரிதம்। 9

*அனந்தபுர ஸம்பூ4தமனேககு3ணபூ4ஷிதம்।

ப்ரபத்3யே ப4க3வச்சி2ஷ்யம் மௌஞ்ஜ்யாயன கு3ருத்தமம்। 10

*வாஸுதே3வக்ருபாபாத்ரம் பஞ்சராத்ரவிஶாரத3ம்।

ம்ருக3ஸ்த2லஸமுத்பன்னம் ப்ரபத்3யே கௌஶிகம் கு3ரும்। 11

*பா4ரத்3வாஜாக்2யமாசார்யம் விஷ்ணோ:பாதா3ப்3ஜ

ஸம்ஶ்ரிதம்।

ப்ரபத்3யே ஸுகு3ணாம்போ3தி4ம் ஸாலக்3ராமா(அ)சலோத்3ப4

வம்। 12

*பஞ்சராத்ரார்த2தத்வஜ்ஞான் பஞ்சஸம்ஸ்கார ஶாலின:।

பஞ்சாசார்யான் ப்ரபத்3யேஹம் பாஞ்சகாலிகதத்பரான்। 13

இதை உபதேசித்தவர் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன். உபதேசித்த இடம் வைகுந்தமென்னும் வான்போகம். அதனால்தான் எந்த ஒரு சாஸ்த்ரங்களுக்கும் இல்லாத ஒருபெயர் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்திற்குக் கிடைத்தது. அதுதான் பகவச்சாஸ்த்ரமென்னும் பெயர்.

அதோடு ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் நான்கு ஸித்தாந்தங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவையாவன ஆகமஸித்தாந்தம், மந்த்ரஸித்தாந்தம், தந்த்ரஸித்தாந்தம், தந்த்ராந்தரஸித்தாந்தம் என்பவை. இவற்றில் நான்குமே ஆசரிக்கத் தகுந்தது தான். தற்போதும் ஆசரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

முதல் ஸித்தாந்தமான ஆகம ஸித்தாந்தம் திருவரங்கம், திருநாராயணபுரம், கஞ்சி என்னும் பற்பல க்ஷேத்ரங்களாகும்.

2வது மந்த்ரஸித்தாந்தம் திருக்குடந்தை, தேரழுந்தூர், போன்றதும் இன்னும் பலக்ஷேத்ரங்களாகும்.

தந்த்ரஸித்தாந்தமாவது திருவநநந்தபுரம் போன்ற மலையாளக்ஷேத்ரங்கள்.

தந்த்ராந்தரம் என்பது ஒரிஸா, போன்ற பற்பலக்ஷேத்ரங்கள். இவற்றில் எம்பெருமான் கூறும்போது ஒருஸித்தாந்தத்துடன் இன்னொரு ஸித்தாந்த சாஸ்த்ரம் கலக்கக்கூடாது என்பது அடிப்படையான விஷயம். அதனால்தான் எம்பெருமானார் சரித்ரத்தை உற்றுநோக்கினால் திருவநந்தபுரத்தை மாற்ற முயலும்பொதும் எம்பெருமான் ஒப்புக்கொள்ளவில்லை.

DRAFT V.S.Jayabal

பூரி ஜகன்னாதர், திருவநநந்தபுரம் போன்ற விஷயமாக மாற்ற முயலும்பொதும் எம்பெருமான் ஒப்புக்கொள்ளவில்லை. இவைகளும் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம ஸம்ஹிதையின் அடிப்படையைக் கொண்டதுதான். மலையாளக்ஷேத்ரங்கள் பரசுராம கல்பஸூத்ரம் என்னும் ராஜஸமான தந்த்ரஸித்தாந்த ஸம்ஹிதைகளைக்கொண்டது.

மற்றவைகள் ஆவேசாவதாரங்களின் உட்பொருள்களான தந்த்ராந்தரமென்னும் ஸித்தாந்த அடிப்படையைச்சேர்ந்தது. இவைகள் தாமஸமென்னும் தந்த்ராந்தரஸித்தாந்த வகைகளைச் சேர்ந்தது.

ஆகமஸித்தாந்தத்தை உபாசிப்பதாலும், அதன் வழியைப்பின் பற்றுவதாலும் நேரடியாக மோக்ஷம் என்பது கண்கூடு. மந்த்ரஸித்தாந்தத்தை அநுஷ்டிப்பதால் மந்த்ரஸித்தியும் பிற்பாடு மோக்ஷமும் ஏற்படும். தந்த்ரஸித்தாந்தம் வேண்டிற்றெல்லாம்கொடுத்து நீண்டகாலம் கழித்து மோக்ஷம். தந்த்ராந்தரமாவது தர்ம, அர்த்த, காமாதிகளை நீண்டநாட்கள் அளித்து இனிப்பிறவி யான்வேண்டேன் என்னும் சலிப்புவரும்போது மோக்ஷமார்க்கத்தை அளிப்பதாகும். ஆக எதற்கும் முடிவு என்பது மோக்ஷமார்க்கமே. அதனால் தால் இந்த சாஸ்த்ரத்திற்கு மோக்ஷசாஸ்த்ரமென்னும் பெயர்.

மேலும் இந்த சாஸ்த்ரத்திலே சொல்லப்படாத விஷயங்களே இல்லை எனலாம். உதாரணத்திற்கு ஒவ்வொரு மனிதனும் நடக்கவேண்டிய நல்வழிமுறைகள் கூறப்பட்டுள்ளது. நான்கு வர்ணத்தாரின் அறநெறிமுறைகள் உறைக்கப்பட்டுள்ளது.

DRAFT
V.S Jayabal

அடுத்து ஒரு நகரம், க்ராமம், பட்டணம் எவ்வாறு அமைக்கவேண்டும், ஆலயங்கள் அமைக்கும் முறைகள், அந்த ஆலயத்தில் விசேஷநாட்களில் நடைபெறவேண்டிய நற்செயல்கள், வீதிகள் எப்படி இருக்கவேண்டும், அதில் அந்தணர்கள் வசிக்கும் இடங்கள், ஜீயர் போன்ற மஹான்கள், அரசர்கள், பொதுமக்கள் இருக்கவேண்டிய இடங்கள், கடைகள், குளங்கள், ஏரிகள், நீர்நிலைகள், ஸ்தலவ்ருக்ஷங்கள் இருக்கவேண்டிய இடங்கள், மக்களும், அரசர்களும் நடக்கவேண்டிய முறைகள், மந்த்ரி என்பவர் யார்? அவர் இருக்கவேண்டிய முறைகள், அர்சகர்களுக்கும் பகதர்களுக்கும் உள்ள உறவுமுறைகள் அர்ச்சகனுக்கும் எம்பெருமானுக்கும் உள்ள உறவுமுறைகள், ஆலயத்தைச் சார்ந்த தொழிலாளிகள் எப்படியிருக்க வேண்டும், மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களெவ்வாறு நடந்து கொள்ளவேண்டும், ராஜநீதி, வ்யாபாரங்களின் அபிவ்ருத்திக்கு என்ன செய்ய வேண்டும் என்ற பகுதிகள், நாட்டியம், சங்கீதம் போன்ற இன்னிசைமூலம் எம்பெருமானை சந்தோஷப்படுத்தும் முறைகள், பூமியில் விளைகின்ற, கிடைக்கின்ற எந்த ஒருபொருளும் எம்பெருமானுக்கு அர்ப்பித்தபிறகே தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் அந்தப்பொருள்கள் சுயநலம் பாராமல் பொது நலத்திற்கே உபயோகப்படவேண்டும் என்னும் உயர்ந்தநோக்கம், இந்த இந்த த்ரவ்யங்களை அளிப்பதால் ஏற்படும் நல்லபலன்கள், அவைகளை அளிக்காமல் தான் ஒருவனே அடைய முற்பட்டால் ஏற்படும் கெடுதி, கொடுத்த த்ரவ்யத்தை அபஹரித்தால் வரும் தீயபலன்கள், ஒரு ஸத்கார்யம் செய்யமுற்படுபவரை செய்யவிடாமல்தடுத்தால் தடுப்பவருக்கு ஏற்படும் இன்னல்கள், அவ்வாறு நடந்தால் நாட்டிற்கும் வீட்டிற்கும் ஏற்படும் துர்பிக்ஷங்கள், வைத்ய சாஸ்த்ரத்தின் பெருமைகள், ஜோதிஷஸாஸ்த்ரதின் தெளிவுகள்.

DRAFT
V.S.Jayabal

## 3.4. ஏதோ ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமே பிழைப்பதற்காக ஆலயங்கள் கட்டப்படவில்லை

ஜீவகோடிகள் அனைவரும் நற்கதி அடைய எவ்வாறு முற்படவேண்டும் என்னும் பொதுநலநோக்கம், இன்னும் பற்பல விஷயங்களைக்கூறும் சாஸ்த்ரம் இதுதான். அதனால் தான் பற்பல மஹாராஜாக்கள் ஆலயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து முதலில் ஆலயங்களைக் காக்கவும் அதைச் சார்ந்து இருப்பதுமே தொழிலாகக் கொண்டார்கள். இவற்றையெல்லாம் எளிதாக எடுத்துரைக்கும் சாஸ்த்ரம் இதுதான். இவ்வாறு இன்னும் பற்பல நல்நோக்கமுடைய சாஸ்த்ரமான ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை தென்னாடும், வடநாடும் தொழ அவதரித்த மாமுனிவர்களான மணவாளமாமுனிகளென்ன! நடுநாட்டுத்திலதமான வேதாந்தாசார்யனென்ன! வடநாட்டுதிலகமென்னும் ஸ்ரீபெரும்பூதூர் வள்ளலாகிய ராமாநுசரென்ன! இன்னும் பற்பலமஹான்கள் ஆஸ்ரயித்து ஆதரித்து இந்த ஆகமத்திற்கு பற்பல நூல்களை வெளியிட்டார்கள். நாமும் இந்த ஆகமத்தைக்கசடறக்கற்று உலகிலேந்துபெரும் செல்வத்தராகி எம்பெருமான் திருவருளும் பெரியபிராட்டியார்பேரருளும்பெற்று உய்வோமாக.

இந்த பகவச்சாஸ்த்ரமாகிய ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை பரவாஸுதேவனிடமிருந்து ஸங்கர்ஷணர், கேசவாதி மூர்த்திகள், ராம, க்ருஷ்ணாதிகள். ப்ரும்மா, நாரதர், ஸநகர்போன்ற மாமுனிவர்கள், அத்ரி, ப்ருகு போன்ற ரிஷிகள், உபரிசரவஸு போன்ற வஸுக்கள், இக்ஷ்வாகு போன்ற மஹாராஜாக்கள், ஆழ்வார்கள், நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார்

DRAFT V.S.Jayabal

தொடக்கமான ஆசார்யர்கள் இன்னும் பற்பல மஹான்கள் இந்த சாஸ்த்ரத்தைக்கற்று தானே நடத்தியும் (அனுஷ்டித்தும்) காட்டியுள்ளனர்.

இந்த ஆகமத்திற்குத்தான் 'ஸநாதன வேதம்' என்றும் இதை உபதேசித்த எம்பெருமானுக்கு 'ஸநாதனன்' என்றும் பெயர் உண்டு.

ஸ்ரீ பாரமேஸ்வர ஈஸ்வர ஸம்ஹிதைகளில் பல அத்யாயங்களில் மூலச்ருதியென்றும், மூலவேதமென்றும், மூலதர்மமென்றும் கூறப்பட்டுள்ளது. இதை உபதேசித்தவர் எம்பெருமான் ப்ரணவ ஆஸனத்தை உடையவரும் பழம்பெருமைவாய்ந்தவருமான ஸ்ரீமந்நாராயணன்.

**आद्यं भागवतं धर्ममादिभूते कृते युगे।**

**अनुतिष्ठन्ति सर्वेपि मानवाश्च मुनीश्वराः! ।2 अ-542।**

***ஆத்3யம் பா4க3வதம் த4ர்மமாதி3பூ4தே க்ருதே யுகே3 |***

***அனுதிஷ்ட2ந்தி ஸர்வேபி மானவாஶ்ச முனீஶ்வரா:! | 2 அ-542 |***


**आद्यं सनातनतनुं प्रणवासनस्थं पूर्णेन्दुभास्करहुताश**

**सहस्रदीप्तिम् | अ-15-231 |**

***ஆத்3யம் ஸனாதனதனும் ப்ரணவாஸனஸ்த2ம்***

ஆக ஸநாதனம் என்னும் சொல்லுக்கு பழம்பெருமை வாய்ந்தவரென்றும் ஆனால் அப்போதைக்கப்போது என்னாராவமுதமே என்னும் படியான புதிதாகக் கிடைத்தவர்போல் தோற்றமளிப்பவர் என்னும் பொருளாகும். அவ்வாறான எம்பெருமான் உரைத்த ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தைக் கொண்டெ இன்னமும் பற்பல ச்ருதி, ஸ்ம்ருதி கார்யங்கள் அன்றாட க்ரியைகள் நடைபெருகின்றன. இதுபோல் இன்னும் பற்பல பெருமைகள் வாய்ந்த ஆகமம் இதுதான்.

DRAFT v.s.Jayabal



## 3.5. இவ்வாகமத்தின் சரித்திரப்புகழ்

1. ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் சாந்திபர்வத்தில், தர்மபுத்ர உபதேசமான ஸஹஸ்ரநாமத்தில், ஸ்ரீமந்நாராயணீயத்தில் இன்னும் பற்பல விஷயங்களில் காணலாம்.

2. புத்தர் அவதாரத்தின் முன்பு இந்த ஆகமம் பல இடங்களில் அனுசரிக்கப்பட்டு வந்துள்ளது. அதாவது கி.மு 6ம்நூற்றாண்டிற்கும் முன்பு. (இந்த விஷயம் டா.எஸ்.கே. ஐயங்கார் மற்றும் பண்டார்கர் எழுதிய பாரத தர்சனம் என்கிற நூலில் காணலாம்).

3. பாணினி என்பவர் எழுதிய ஸூத்ரங்களில் ஸ்ரீபாஞ்சராத்ரம் உதாஹரிக்கப்படுகிறது. இவரது காலம் கி.மு. 4ம் நூற்றாண்டு.

4. பதஞ்சலி எழுதிய வ்யாகரண ஸூத்ரங்கள், அஷ்டாத்யாயி முதலியவற்றில் காணலாம். இவரது காலம் கிமு 2ம் நூற்றாண்டு.

5. உத்பலாசார்யர் என்பவர் எழுதிய 'ஸ்பந்தப்ரதீபிகா', என்னும் நூலில் பாஞ்சராத்ரஸம்ஹிதா, பாஞ்சராத்ர உபநிஷத்என்கிற நூலின் உரையில் விளக்கியுள்ளார். இவரும் கி.மு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவரே.

6. டா.ஸர்வேபல்லி ராதாக்ருஷ்ணன் அவர்கள் எழுதிய

DRAFT V.S.Jayabal

'பாரதீயதத்வசாஸ்த்ரம்' என்கிற நூலில் ஸ்ரீபாஞ்சராத்ர திவ்யாகமம் என்பது கி.மு 8ம் நூற்றாண்டிலேயே புழக்கத்தில் இருந்தது என்று விளக்குகிறார். மேலும் ராஜபுத்திரர்களின் காலகல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலியவற்றில் ஸங்கர்ஷணன், வாஸுதேவன் என்கிற பெயர்கள் காணப்படுகின்றன. இவைகள் கி.மு 2ம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவை.

7. ஆர்.ஜி.பண்டர்கார் என்பவர் க்ரீக் அரசரின் ப்ரதிநிதி ஒருவருக்கு பாகவத் என்கிற பெயர் வைத்து கருடத்வஜத்தை ஸ்தாபித்தார் என்று எழுதியுள்ளார். இவர்களது பூர்வீககாலமும் கிமு 2ம்நூற்றாண்டு.

மேலும் காம்போஜ தேசத்தில்(தற்போதைய கம்போடியா), ஜயவர்மா என்கிற சக்ரவர்த்தி கி.பி 650ம் வருடம் ஒருபெரிய ஆலயத்தை நிறுவி அதில் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம முறைப்படி பிம்பப்ரதிஷ்டை செய்து நித்யோத்ஸவாதிகள், பூசனைகள் முதலியவற்றைச் செய்தார் என்று கொய்பான் இண்டாலஜி ப்ரொபசர் மிட்சனூரி, மட்சுபாரா (Mitsunori, Matsubara) என்பவர் தனது நூலில் விளக்கியுள்ளார். (Pancharathra samhithas and early vaishnava theology)

இன்னும் பலசிறப்புகள் வாய்ந்த இந்த ஆகமத்தில் தான் வேதம் என்பது எவ்வாறு 4 விதமாக ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று உள்ளதோ அதைப்போல் ஆகமஸித்தாந்தம், மந்த்ரஸித்தாந்தம், தந்த்ரஸித்தாந்தம், தந்த்ராந்தரஸித்தாந்தம் என்கிற பெயரில் வழங்கப்படுகிறது.

DRAFT V.S. Jayabal

அவைகளே பிற்காலத்தில் சாகை எனப்படுகிற ஸம்ஹிதைகள் என்கிற பெயரில் **108, 1008** கணக்கில் பிரிக்கப்பட்டு வழக்கில் உள்ளது.

DRAFT
V.S.Jayabal



## 3.6. இந்த ஆகமம் கூறும் அர்ச்சகர்களின் பெருமைகளும். நடக்கவேண்டிய நெறிமுறைகளும்

*அர்சகஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சரரூபீ ந ஸம்சய:*

*அர்சகோ பகவத் ஸுத: பஞ்சாயுதாம்ச ஸம்பூத:,*

'அஸ்மத் கோத்ரப்ரவர்தக:' என்று இன்னும் பற்பல புகழும் பெருமையும் கொண்டவர்கள் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம அர்சகர்கள்.

இவர்கள் வம்சாவழியாக வந்திருக்கலாம், அல்லது வம்சாவளியில் வந்தவர்களிடம் முறையாக பாடங்களைக்கற்று தீக்ஷை பெற்றுக்கொண்டு எம்பெருமானை ஆராதிபவர்களாக இருக்கலாம். இவர்கள் தான் எம்பெருமானிடம் நேரில் பேசக்கூடிய தகுதிபெற்றவர்கள். எம்பெருமானும் இவர்கள் மூலம் தான் தன்னுடைய கார்யங்களை செய்யச் சொல்லி நடத்திக் கொள்கிறான். அர்சக பராதீநன் என்று பகவானுக்கு திருநாமம். பக்தர்களுக்கும் பகவானுக்கும் மத்தியில் இருந்து பக்தர்களுக்கு வேண்டிய நன்மை தீமைகளை எடுத்துச் சொல்லக்கூடிய தகுதி பெற்றவன் அர்ச்சகன். மேலும் முந்தய காலங்களில் மஹாராஜாக்களுக்கு அருகில் மந்த்ரி எனப்படும் முக்கியமாக செயல்படக் கூடியவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஏனெனில் த்வாதாசாக்ஷரமென்னும் மிக உயர்ந்த மந்த்ரத்தை இடைவிடாமல் ஜபம் செய்து கொண்டிருப்பவனுக்குத் தான் மந்த்ரி என்னும் பெயர். அந்த த்வாதசாக்ஷரத்தின் ரிஷி, சந்தஸ், த்யானம், ந்யாஸங்களை அறிந்தவன் ஸ்ரீபாஞ்சராத்ர அர்சகன் ஒருவனே.

இவனே அஷ்டாக்ஷரமந்த்ரத்தை சித்திசெய்து கொள்வதால் காரியாகிறான்.

DRAFT V.S.Jayabal

**विष्णोराराधनपरा: पञ्चकालपरायणा: ।**

**अष्टाङ्गयोगसिद्धाश्च द्वादशाक्षरचिन्तका:48**

**वासुदेवाश्रया मर्त्या वासुदेवपरायणा: ।**

***விஷ்ணோராராத4னபரா: பஞ்சகாலபராயணா: |***

***அஷ்டாங்க3யோக3ஸித்3தா4ஶ்ச த்3வாத3ஶாக்ஷரசிந்தகா:48***

***வாஸுதே3வாஶ்ரயா மர்த்யா வாஸுதே3வபராயணா: |***

மஹாவிஷ்ணுவான எம்பெருமானை பூஜிக்கத்தகுந்தவனும் உலகிற்கு நன்மையை மட்டுமே எப்போதும் வேண்டுபவனுமான அர்சகன் ஸ்ரீபாஞ்சராத்ரிகன் தான். அப்படிப்பட்ட அர்சகர்களாகிய நாம் இருக்க வேண்டியமுறைகள்.

அநுதினமும் அதிகாலையில் எம்பெருமானை த்யானித்தபடியேதுயிலெழுதல்.

ப்ரும்மசாரியானால், க்ருஹஸ்தனானால், ஆசார நியமங்களோடு, ஸ்நாநம் செய்து தூய்மயான ஆடை உடுத்தி திருமண் காப்புதரித்தல்.

சிகை எனும் குடுமி, க்ருஹஸ்தநானால் பஞ்சகச்ச வேஷ்டியுடன் இருத்தல் மிக முக்கியம். ஸந்த்யாவந்தனாதிகளை தவராமல் செய்தல்.

DRAFT
V.S.Jayabal

எம்பெருமானையும், எம்பெருமானது வஸ்துக்களையும் நல்லமுறையில் பாதுகாத்தல்.

ஆலயத்திற்கு செல்லும் முன் க்ருஹத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு பூஜைகள் செய்தல்.

ஆலயத்தில் கர்பக்ருஹம் போன்றவற்றை தவராமல் சுத்தம் செய்தல்.

அர்க்யாதி பாத்ரங்களையும், தீபபாத்ரங்களையும், சுத்தீகரித்து தூய்மையான நீர் சேர்த்து பூதசுத்தி போன்றவற்றை செய்துகொண்டு திருவஷ்டாக்ஷர மந்த்ர ஜபம் செய்து கொண்டு எம்பெருமானுக்கு திருவாராதனம் செய்தல்.

கூடுமானவரையில் கர்பக்ருஹத்திற்குள் ப்ளாஸ்டிக் போன்ற வஸ்துக்களை எடுத்துச் செல்லாதிருத்தல்.

முக்கியமாக எம்பெருமானுக்கு அருகில் அனாவசியமான வார்த்தைகளை தவிர்த்தல்.

எம்பெருமான் தளிகை மூடும் வஸ்த்ரங்கள் தூய்மையாக இருக்க உதவுதல். எம்பெருமானது திருநாமம் தவிர வேறு எதையும் ஸன்னதிகளில் பேசாதிருத்தல். முடிந்தவரை அந்த எம்பெருமானின் அர்ச்சனைகளை முழுமையாகக்கற்றறிதல். திருப்பாவை போன்ற நித்யாநுஸந்தான ஆழ்வார் பாசுரங்களை தவரில்லாமல் வாசிக்கமுறப்படுதல்.

DRAFT
V.S.Jayabal

கூடுமானவரை அந்தந்த எம்பெருமானிடம் பய, பக்தியுடன் இருந்தாலே எம்பெருமான் அவர்களிடம் பேசுவான்.

அலக்ஷ்யம், அஹம்பாவம், அக்ஞானம்(மறதி) இல்லாதிருத்தல். இவைகள் அடிப்படையாக பெற்றால் முதலில் அர்ச்சககுடும்பங்கள் நல்ல நிலையில் இருக்கும்.

இவர்கள் குடும்ப ஸௌகர்யத்திற்கு சம்பளம் என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிற பணம் கொடுக்கலாகாது. அதனால் இவர்களுக்கு வீடுவசதி, மற்றும் பூமிதானமே செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது। இவர்களுக்கு வீடு தோட்டம் போன்றவைகள் ஆலயத்திற்கு அருகிலேயே அளிக்கவேண்டும்.

***இத்யேவம் விதி4நா கர்தா ப4க3வத்பூஜநார்த2கம்|***

***பூ4தா3னமேவ குர்வீத ப்4ருதகம் ப்ரத3தா3தி சேத்|***



## 3.7. ஸ்ரீபாஞ்சராத்ரம் கூறும் பரிசாரகர்கள் பெருமைகள், நடக்கவேண்டிய நெறிமுறைகள்

மேலே கூறிய வழிமுறைகளில் மந்த்ர ஜபம் என்பது இவர்களுக்கு தேவையில்லையே தவிர மற்ற அனைத்து கைங்கர்யங்களும் இவர்களுக்கு உண்டு. இவர்கள்தான் ஹஸ்தகர: எனும் பண்டாரி என்று அழைக்கப்படுகின்ற பரிசாரகர்கள்.

**ஹஸ்தகா: தத்கர்தவ்ய வித4ய:**

**அர்சகஸ்ய ஸஹாயார்த2ம் தே3வகார்யேஷ்வஹர்நிஶம்|**

**பாத்ராதி3 ஶோத4நார்த2ம் ச தீ3பப்ரஜ்வலநார்த2கம்|**

**ஹஸ்தக4ண்டா சாலநார்த2ம் ப்ரோக்ஷணாய ஸ்த2லாதி3கம்|**

**ஏகஸ்யார்சக விப்ரஸ்ய த்3வாத்3வாஸங்க்2யாக வைஷ்ணவை:|**

**அர்சகா(அ)ர்ஹைஶ்ச ஸர்வைஶ்ச**

**லக்ஷணைஸ்ஸம்யுதைஶ்ஶுபை4:|**

எம்பெருமானைத்தொட்டு திருவாராதனம் செய்ய முடியாதே தவிர அர்ச்சகர் நியமனம் பெற்று ஸ்ரீசடாரி முதலானவற்றை தொடக்கூடிய பாக்யம் பெற்றவர்கள். எம்பெருமானை எழுந்தருளப்பண்ணும் ஸ்ரீபாத கைங்கர்யம் மற்றும் ஆபரணங்கள்,வஸ்த்ரங்கள் போன்றவை இவர்களது வசம்இருக்கும்.அவற்றை பாதுகாத்து வேண்டியபொழுது அர்ச்சகர்களிடம் கொடுத்து பூஜைகள் முடிந்ததும் வாங்கி

DRAFT V.S.Jayapal

பத்திரப்படுத்துதல் இவர்களது கடமை. இவர்களை காஞ்சி போன்ற திவ்யதேசங்களில் தீக்ஷாபரிசாரகர்கள் என்ற பெயரில் அழைப்பர்கள்.இவர்கள் நல்வாழ்விற்கு பூமிதானமே கொடுக்கவேண்டும். ஆதாரம் ஸ்ரீ பரமபுருஷ ஸம்ஹிதை-2ம் அத்யாயம்.

ஸ்தலத்தார்கள் எனும் ஸ்தானாசார்யர்கள் பெயர் விவரணம்,

அவர்களது கடமைகள், (பரமபுருஷ ஸம்ஹிதை)

<u>ஸ்தா2நாசார்ய லக்ஷணம்</u>

ப4க3வத்பாத3தீர்தா2ம்பு3 ஸேவநார்த2ம் வரேத்தத:|

ஸ்தா2நாசார்யம் ச தத்ஸ்தா2னே ஹஸ்தகம் ச நியோஜயேத்|

ஸத்3வம்ஶஜோ ஸத்யவாதீ3 ஸஜ்ஜனோ ஸத்3கு3ணாகர:|

ஸதா3சாரீ ச ஸத்3ப4க்தஸ்ஸதா3 ஹரிபராயண:|

க்ரோத4லோப4மதா3த்3யைஸ்து வர்ஜிதோ

வைஷ்ணவோத்தம:|

வேத3வேதா3ங்க3 வேதீ3 ச தபஸ்ஸ்வாத்4யாய தத்பர:|

பாஞ்சராத்ரவிதா4னஜ்ஞ பஞ்சஸம்ஸ்காரதீ3க்ஷித:|

பாஞ்சகாலிக த4ர்மஜ்ஞ: பரமைகாந்திருத்தம:|

ஸர்வாவயவஸம்பூர்ணோ ஸர்வாரோக்3ய ஶரீரக:|

வயோவ்ருத்3த4: க்ருபாமூர்தி: ஸ்தா2நாசார்யோ ப4வேச்சு2சி:|

வம்ஶக்ரமாக3தேனைன விதி4நா ஹரிஸன்நிதௌ4|

DRAFT
V.S.Jayabal

இவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களாக இருத்தல் வேண்டும். ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை நன்கு கற்றிருக்க வேண்டும். உண்மையை உரைப்பவர்களாகவும், நற்குணங்கள் நிரம்பியவராக, வேத வேதானங்கள் என்று கூறப்படுகிற உபயவேதங்களிலும் நிபுணராக இருத்தல் வேண்டும். முக்கியமாக இவர்களும் அர்ச்சகர்களைப் போல் வம்சாவழியில் வந்தவர்களாக் இருக்கவேண்டும். இவர்கள் க்ருஹஸ்தன், ப்ரும்மசாரி, ஸந்யாசியாக இருக்கலாம். இவர்களுக்கு முதல் தீர்த்தம் என்பது அர்ச்சகர்களுக்கு முடிந்த பிறகு அளிக்கவேண்டும். அதைப்போல் ப்ரஸாதமும் அப்படியே.

இவர்களுக்கும் நிலபுலன்கள் தானமாக அளித்து அதன்மூலம் வாழ்வு வளம்பெறச்செய்யவேண்டும். ஸன்யாசி உத்தமம் என்று கூறப்பட்டுள்ளதால்தான் பற்பல ஆலயங்களில் இன்றும் அவர்களையே ராமானுஜர் நியமித்தார்.

DRAFT
v.s.Jayabal

## தத்கர்தவ்ய வித4ய:

***ப்ரஸாத3ம் ப4க3வத்தீர்த2ம் ப்ரத2மம் து பரிக்3ரஹேத்|***

***ஆலயே சைவ வஸ்தவ்யமஹோராத்ரம் ஸ்வயங்கு3ரு:|***

***ஸூர்யோத3யம் ஸமாரப்4ய யாவத3ர்சாவஸானகம்|*** 46

இவர்களுக்கும் வீடு நிலம் போன்றவைகள் அளிக்கவேண்டும். இவர்களது கடமையாவது ஒவ்வொரு க்ஷணமும் எம்பெருமானது ஆலயத்திலேயே வசித்தல். அவரது குணநலன் களைப்பாடுதல்,மற்றும் அவரது சொத்துக்களைப் பேணி

பாதுகாத்தல்.

### தத்ஸம்மாநாதி3,ததா3ஶ்ரம நிர்ணய:-

அவர்களுக்கு வேண்டிய வசதிகள் நிலபுலன்களே


ப்3ரஹ்மோத்ஸவாதி3கேத்வாதௌ3 தஸ்ய ஸன்மானமுச்யதே|

ப்3ரஹ்மசாரீர்க்3ருஹஸ்தோ2வா யதிர்வா லக்ஷணைர்யுத:|

ஸ்தா2நாசார்யோ ப4வேத்ஸத்யமிதி ஶாஸ்த்ரேஷு நிஶ்சய:|

யதிஶ்சேது3த்தம:ப்ரோக்தோ க்3ருஹ்ஸ்து2ர்மத்4யமஸ்ம்ருத:|

அத4மோப்3ரஹ்மசாரீஸ்யாத் ஸ்தா2நாசார்ய விநிஶ்சயே|



## 3.8. திவ்யப்ரபந்தம் ஓதக்கூடிய அத்யாபகர்கள் நியமனம் மற்றும் அவர்களது கடமைகள்

**அத்4யாபகா:**

***வேத3பாராயணார்தே2 ச ஶாஸ்த்ரஸ்தோத்ர ப்ரபாட2னே|***

***த்3ராவிடா3ம்நாய பட2னே ப்ரத்யஹம் தே3வஸன்நிதௌ4|***

***அத்4யாபகாநீ ச வரயேத் பூர்வோக்தேனைவ வர்த்மநா|***

வேத, திவ்யப்ரபந்த, இதிஹாஸ, புராணங்கள் விண்ணப்பம் செய்பவர்களை அத்யாபகர்கள் என்று அழைக்கப்படுவர்கள். இவர்களும் எப்போதும் எம்பெருமான் திருமுன்பு வேதம், திவ்யப்ரபந்தம் போன்றவற்றை ஓதிக்கொண்டும், அதனுடைய அர்த்த விசேஷங்களைச் சொல்லிக்கொண்டும் இருத்தல் கடமை.

***த்3வாத3ஶாக்ஷர ஸங்க்2யாகாஶ்சைவமத்4யாபகாஸ்ததா2|***

***தி3வாராத்ரஞ்ச தே3வேஶம் ப்ரார்த2யேல்லோகரக்ஷணே|***

***ராஜராஷ்ட்ராபி4வ்ருத்3த்4யர்த2ம் நிர்மலேனைவ சேதஸா|***

## தத்ஸம்மாநாதி3,ததா3ஶ்ரம நிர்ணய:

*அவர்களுக்கு வேண்டிய வசதிகள் வீடு மற்றும் நிலபுலன்களே.*

இவர்கள் ஆயிரக்கணக்கானவர்களாக நியமித்தல் அரசனது பொருட்செல்வத்தின் செழுமையை அறிவிக்கும். அதுவே

DRAFT
V.S.Jayabal

திருவரங்கத்தில் செந்தமிழ்பாடுவார் வீதி என்று சுமார் 700 அரையர்கள் பல்லாண்டு பாட நம்பெருமாளுக்கு உத்ஸவங்கள் நடந்திருக்கிறது. ஆதாரம் கோயிலொழுகு.

இவ்வாறு குணங்களுடனும் யோக்யதையுடனும் இருக்கக்கூடிய அர்ச்சகர்களோ மற்றும் ஸ்தலத்தார்களோ, அத்யாபகர்களோ இன்று யாராவது இருக்கிறார்களா? ஏன் இல்லை. அதுபற்றிய சிந்தனை- கடைசியில் செய்வோம்.

<u>அடுத்து வாத்யக்காரர்கள், காவல்காரர்கள் போன்றவர்கள் வசதி</u>

***ததி3தர பரிசாரக நிர்ணய:***

***பே4ரீ ம்ருத3ங்க3 படஹ வீணாவேண்வாதி3 வாத்3யகான்|***

***க4ண்டாகாஹள தூர்யாதி3 மர்த்3த4ள த்4வநிகாரகான்|***

***ந்ருத்தகீ3தாதி3 நிபுணான் வந்தி3மாக3த2 லேக2கான்|***

***வேத்ரஹஸ்தான் ப4டான்சைவ க3ஜா(அ)ஶ்வோஷ்ட்ராதி3***

***பாலகான் ததா2|***

***ச2த்ரசாமர வேத்ராதி3 தா4ரகான் வாஹகான்ஸ்ததா2|***

***தே3வபூஜாபி4வ்ருத்3த்4யர்த2ம் யதா2ஶக்தி நியோஜயேத்|***

பேரீ போன்ற வாத்யங்கள் வாசிப்பவர்கள், நாட்யமாடுபவர்கள், யானை, குதிரை, பசு போன்ற மிருகங்களைப் பாதுகாப்பவர்கள், எம்பெருமான் ஆலயபாதுகாவலர்கள், (வேத்ரஹஸ்தான்) மெய்காவல் என்றுபெயர். மற்றும் பற்பல தொழிலாளர்கள்.

DRAFT V.S.Jayabal

இவர்களுக்கும் முன்புகூறிய வசதிகள் செய்துகொடுத்து ஒரு ஆலயம் பராமரிக்கவேண்டும்.

இவர்கள் அனைவரும் மணியார் என்று கூறக்கூடிய ஸ்ரீவைஷ்ணவ, ப்ராம்மணர்களின் கட்டுப்பாட்டில் இருப்பர்கள். அந்த மணியார் என்பவர் தர்மாதிகாரி கட்டுப்பாட்டில் இருப்பர்கள். இவர்கள் அனைவரும் அர்ச்சகரின் நியமனத்தின் பேரில் இருக்கவேண்டும்.

***த4ர்மாதி4காரீசைகஸ்து வர்ததே யதி3 ஸோபி வா|***

***அர்சகாஜ்ஞானுஸாரேண ஸேவகான் ஸர்வதா3பிவ|***

***ஸமாஹூய ச தேஷாம் து யோக்3ய கார்யாணி நிர்தி3ஶேத்|***

அடுத்து ஒரு க்ராமத்திற்கு ஆலயம் ஜீவன். அந்த ஆலயத்திற்கு எம்பெருமானது விக்ரஹம் ஜீவன். அதற்கு மந்த்ரமயமான சக்தியைக்கொடுப்பவர்கள்தான் அர்ச்சகர்கள்.

உதாரணத்திற்கு சிர்பசாலையில் சிலைகள் வடிக்கப்பட்டாலும், கண் திறக்கப்பட்டாலும் அங்கே எல்லோராலும் பார்க்கப்படுவது சிலாரூபம் தான். அனால் அதே ரூபமான விக்ரஹம், ஆலயத்திற்குள் வைத்து ஸம்ஸ்காரங்கள் பற்பல செய்து “ கோலம் செய்து இங்கே இரு” , என்று ப்ரதிஷ்டைக்கான மந்த்ரங்களைக் கூறிவைத்துவிட்டால் அந்த விக்ரஹத்திற்குப் பெயரே மாறிவிடுகிரது.

ரங்கநாதன், கோவிந்தராஜன் என்று பற்பலபெயர்களில்

அழைக்கப்படுகிறான். தாயாரும் அப்படியே. அவ்வளவு மஹிமைபொருந்திய அர்ச்சகர்கள் .இன்றைய காலத்தில் எவரும் இருப்பதாகத்தெரியவில்லை.

அதற்கு மூல காரணம் " அரசன் எவ்வழி- மக்கள் அவ்வழி'', (யதாராஜா ததாப்ரஜா:) ஏன்றொரு மூதுரை உண்டு. அதன்படி தற்காலத்தில் அரசாங்கமானது ஆலயத்தின் சொத்துக்களை அனுபவிக்கப் பார்க்கிறதே தவிர அங்கு ஒழுங்கான பூஜைகள் நடைபெருகிறதா, அதற்கான வசதிகள் இருக்கிறதா என்று பார்ப்பதில்லை.

இவ்வளவு பெருமைகள் பொருந்திய ஆலய பூஜாமுறைகளை சொல்லித்தருவதற்கு ஒருபாடசாலையோ, அல்லது அதை நடத்துவதற்கான வசதிகளையோ ஒன்றும் ஏற்படுத்தவில்லை.

பக்தர்களின் மனதும் பூஜைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. தன் சுயநலத்திற்காகவே அர்ச்சனை, அபிஷேகம் போன்றவைகளைச் செய்து கொள்ள முற்பட்டதால் முன்புகூறிய விதிமுறைகள் அழிந்து வருகின்றன. ஆனால் ஏதோ ஒரு நூலிழையில் தர்மகார்யங்கள் நடைபெறுவதால் உலம் செழுமையாக இருக்கிறது. இந்த இன்னல்களிலிருந்து எம்பெருமான் காத்து ரக்ஷிப்பாராக. நிற்க.

இதுபோன்ற இன்னும் பற்பல பெருமைகள் வாய்ந்த இந்த ஆகமத்தில் ஆலய நிர்மாணமும், கோபுர நிர்மாணங்களும், ஜீர்ணோத்தார (பழுதடைந்த வஸ்துக்களை சரிசெய்வது) முறைகளும் கூறப்பட்டுள்ளது.

DRAFT V.S.Jayabal

ஆலயமானது நிர்மாணிப்பதற்கு முன்பாக எம்பெருமானிடம் அனுக்ஞா (விண்ணப்பம்), என்னும் கார்யம் நடைபெறும் போது, இதுபோல் தேவரீருக்கு ஒரு ஸன்னதியும், அதற்கான விமானமும், கோபுரங்களும் நிர்மாணிக்க இருக்கிறோம். அதற்கு தேவரீர் அனுமதி தரவேண்டும் என்பதும், அந்த ஆலயத்தில் சந்த்ர ஸூர்யாதிகள் உள்ளவரையில் தேவரீர் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கவேண்டும் என்பது தான் ஆரம்பம்.

पांचरात्रोक्त विधिना त्वदुक्तेन जगत्पते.

विमानगोपुरादीनि निर्माय च यथाविधि.

तस्मिन्नर्चारूपधरं श्रीभूमि सहितं विभुम्....... *என்று தொடங்கி*

स्वामिन् सर्वजगन्नाथ! यावच्चन्द्रदिवाकरौ.

तावत्त्वं भक्तिभावेन शिखरेस्मिन् (बिम्बेस्मिन) सन्निधिं कुरु.

(श्रीप्रश्नम् 23 अ 236-240)

இதில் வரக்கூடிய கோபுராதீனி என்னும் பதம், பஹுவசநமாக உள்ளதை ஆன்றோர்கள் கவனிக்க வேண்டும். ஒரு ஆலயம் என்பது வைகுண்டம் எவ்வாறு உள்ளதோ அதைப்போலவே பாவிக்க வேண்டுமென்றும், அங்கு நடக்கும் கைங்கர்யங்களே இங்கு நடப்பதாகவும், அங்குள்ள ஸ்வரூபங்களே இங்கு இருப்பதாகக் கொள்ளவேண்டும் என்றும் பெரியோர்கள் கூறுவர்.

அதன்படிப் பார்த்தால் **108** திவ்யதேசங்களில் ஸாயுஜ்ய

DRAFT V.S.Jayabal

வைகுண்டமே திருவரங்கம் என்றும், மற்றவையெல்லாம் ஸாரூப்ய, ஸாமீப்ய, ஸாலோக்யாதி வைகுண்டங்களே என்பது தெளிவு. அவ்வாறான வைகுண்டங்களின் உருவ அமைப்புகளைக் கூறும் போது

अव्यक्तं च ततो ध्यायेत् प्रमोदनमुदाहृतम्.

तत्तु सालोक्यवैकुण्ठम् विमानैः स्वर्णनिर्मितैः.

नानारत्नमयैश्चित्रैः प्रासादैर्गोपुरैरपि.

अप्राकृतैर्मनोहार्यैः कल्पवृक्षैश्च संवृतम्.

मणिकुट्टिमसोपानमहार्हमणिवेदिकम्.

शतयोजनविस्तारं अनेकशतमायतम्.

तस्मिन् लोकोत्तरे दिव्ये प्रथमे देवपूजिते.

आस्तेऽनिरुद्धो भगवान् मायादेवीसमन्वितः.

*அவ்யக்தம் ச ததோ த்4யாயேத் ப்ரமோத3னமுதா3ஹ்ருதம்.*
*தத்து ஸாலோக்யவைகுண்ட2ம் விமானை: ஸ்வர்ணநிர்மிதை:.*
*நாநாரத்னமயைஸ்2சித்ரை: ப்ராஸாதை3ர்கோ3புரைரபி.*
*அப்ராக்ருதைர்மனோஹார்யை: கல்பவ்ருக்ஷைஸ்2ச*
*ஸம்வ்ருதம்.*
*மணிகுட்டிமஸோபானமஹார்ஹமணிவேதி3கம்.*
*ஶதயோஜனவிஸ்தாரம் அனேகஶதமாயதம்.*
*தஸ்மின் லோகோத்தரே தி3வ்யே ப்ரத2மே தே3வபூஜிதே.*
*ஆஸ்தேஅநிருத்3தோ பக3வான் மாயாதே3வீஸமன்வித:.*

என்பதாக நான்கு வ்யூஹங்கள் உள்ள வைகுண்டங்களிலும்

DRAFT
V.S.Jayabal

விமானகோபுரங்கள் இருப்பதாகவும், அதைத்தவிர விபவாவதாரங்கள் ஆவிர்பவிப்பதான தர்மானந்த வைகுண்டத்திலும் நவரத்ன கசிதமான கோபுரங்கள் இருப்பதாக உள்ளது. அதைப்போலவே பரமபதத்தின் லக்ஷணம் சொல்லும்போதும் வீதிகளும், நகர்ப்புரங்களும், அநேக விமானங்களும், கோபுரங்களும் கூடியதான திவ்யநகரத்தில் நடுநாயகமான மணிமண்டபத்தில் ஸ்ரீபூமிநீளாதேவிகளுடன் எம்பெருமான் எழுந்தருளியுள்ளதாக கூறப்படுகிறது. ஆதாரம் ப்ருஹத்ப்ரும்ம ஸம்ஹிதை நான்காம் பாகம் மற்றும் ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதை 23 அத்யாயம். இதையே ஆழ்வாரும்

கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்*
வடியுடைமாதவன் வைகுந்தம் புகவே* என்கிறார்.

இந்த கோபுரங்களானது அழகிய படிகட்டுகளுடனும் அதை சுற்றி அதிதேவதைகள் வ்ருக்ஷங்களாகவும், நான்கு புஷ்கரணிகளாகவும், மலைகளாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

सोपानपङ्क्तय: पार्श्वे कल्पनीया यथोन्नति: । (पाद्मम् चर्या पादम् 30 अ 98श्लोकम्)

## த்வஜஸ்தம்பாதிகளின் நிர்மாணம்

गोपुरद्वारविस्तारस्त्रिगुणा वा चतुर्गुणा ।।

அடுத்ததாக ஆலயங்களில் த்வஜஸ்தம்பம் மற்றும் பலிபீடம் நிர்மாணிக்கும் போது, ப்ரதான த்வாரமாகிய ராஜகோபுரத்தின் உயரம், நீளம் மற்றும் அகலங்களைக் கணக்கிட்டுக்கொண்டு ஸ்தாபிக்கவேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

DRAFT V.S.Jayabal

## நான்கு திக்குகளிலும் கோபுரம் அமைக்கும் விதம் -1

***சத்வாரி கோ3புராணி ஸ்யுர்தா4ம சேத்ஸோபபீட2கம் |***

***அக்3ரே து மண்ட3பஸ்யார்தே4 விபுலோ வ்ருத்தமண்ட3ப: | 17***

***ஸமுச்ச்2ரிதம் ப்ரதிஸமமதி4கம் வா யதே2ச்ச2யா |***

**(விஷ்ணு திலக ஸம்ஹிதை)**

**பாத்ம ஸம்ஹிதை இரண்டாம் அத்யாயம், மற்றும் பற்பல ஸம்ஹிதைகளிலும் கூறப்பட்டுள்ளது.**

***ஸோபபீட2ஸ்ய தா4ம்ன: கோ3புரசதுஷ்டயம் **நான்கு***

***சத்வாரி கோ3புராணி ஸ்யுர்தா4ம சேத்ஸோபபீட2கம் |***

***அக்3ரே து மண்ட3பஸ்யார்தே4 விபுலோ வ்ருத்தமண்ட3ப: || 17||***

***ஸமுச்ச்2ரிதம் ப்ரதிஸமமதி4கம் வா யதே2ச்ச2யா |***

***** ப்ராகாரஸ்ய சதுர்தி3க்ஷு கோ3புரசதுஷ்டயப3ந்த4விகல்ப: *****

***ப்ராகாரஸ்ய சதுர்தி3க்ஷு கோ3புராணி ப்ரகல்பயேத் |***

***தா4மாக்3ரப்ருஷ்ட2யோர்வா ஸ்யாத் அக்3ரேசைகம் ப்ரகல்பயேத் || 36||***

**நான்கு திக்குகளிலுமோ இரண்டு வாசலகளிலோ(உ-ம் கும்பகோணம்) அல்லது ஒருவாசலிலோ கோபுரங்கள் அமைக்கவேண்டும்.**

***ப்ரதிஷ்டா2 கோ3புரஸ்யாபி மந்தி3ரஸ்யேவ நா(அ)ன்யதா2 || 90||***

*ப்ராகாரஸ்ய ப்ரதிஷ்டா2யாம் க்ருத்வா ஸர்வம் யதா2புரம் |*

கோபுரத்தின் ப்ரதிஷ்டையென்பது விமானம், கர்ப்பக்ருஹம் போன்றவைகள் எந்த விதிப்படி செய்யப்படுகிறதோ அதைப்போலவே விதிப்படி செய்யவேண்டும்.

ஆகையால் ஒரு ஆலயத்திற்கு நான்கு பக்கங்களிலும் த்வாரம் இருக்கலாமென்றும், அந்த த்வாரத்திற்கு கோபுரங்கள், மற்றும் படிக்கட்டுகளும் அமைக்க வேண்டும். அந்த கோபுரமானது விமானத்தைப் போலவே ப்ரதிஷ்டாதிகளும், திக்தேவதைகளும் கூறப்பட்டுள்ளது.

DRAFT
V.S.Jayabal

## ராஜ கோபுரத்தின் முக்கியத்வம்



*ப்ராகாரஸ்ய சதுர்தி3க்ஷு கோ3புராணி ப்ரகல்பயேத் |*

*தா4மாக்3ரப்ருஷ்ட2யோர்வா ஸ்யாத் அக்3ரேசைகம் ப்ரகல்பயேத்.*

என்று பாத்3மம்- 10 அத்யாயத்திலும்

உத்தமமான ஆலயத்திற்கு நான்கு திக்குகளிலும் பற்பல கோபுரங்கள் இருக்களாம். இல்லையெனில் கோயிலின் முன்பும் பின்புமாவது இருக்க வேண்டும். குறைந்த பட்சமாக ஒரு ராஜகோபுரமாவது இருக்க வேண்டும்.

அத்தோடு நகர்ப்புரங்கள் அமைப்பும் கூட நான்கு கோபுரங்களுக்கு உட்பட்டு, அனேக்கோபுரங்களுக்குள்ளும் இருக்கலாமென்று ப்ருஹத்ப்ரும்ம ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. இதுதான் திருவரங்கப்பெருநகரம்.

## அவ்வாறு அமைத்த கோபுரத்தின் வாயிலும் அதன் பலன்களும்

प्राग्द्वारं सुखदं विद्धि पश्चिमं पुष्टिवर्धनम्.

धनदंचोत्तरद्वारं द्वारं याम्यं च मोक्षदम्. (पाद्मे-क्रियापादे-2अ 33)

என்ற பாத்மஸம்ஹிதை வசநப்படி ப்ரதான கோபுர வாயிலானது கிழக்கில் இருந்தால் லோகத்திற்கு ஸுகமும், மேற்கில் ஆரோக்யமும், வடக்கில் தன, தான்ய அபிவ்ருத்தியும், தக்ஷிணமாகிய தெற்கில் இருப்பதால் மோக்ஷஸாம்ராஜ்யம் கைகூடும் என்று கூறப்பட்டுள்ளது. தவிர

** सोपपीठस्य धाम्न: गोपुरचतुष्टयम् **

चत्वारि गोपुराणि स्युर्धाम चेत्सोपपीठकम् ।

अग्रे तु मण्डपस्यार्धे विपुलो वृत्तमण्डप: ॥ 17॥

समुच्छ्रितं प्रतिसममधिकं वा यथेच्छया ।

** प्राकारस्य चतुर्दिक्षु गोपुरचतुष्टयबन्धविकल्प: **

प्राकारस्य चतुर्दिक्षु गोपुराणि प्रकल्पयेत् ।

धामाग्रपृष्ठयोर्वा स्यात् अग्रेचैकं प्रकल्पयेत् ॥ 36॥

प्रतिष्ठा गोपुरस्यापि मन्दिरस्येव नाऽन्यथा ॥ 90॥

DRAFT V.S.Jayabai

प्राकारस्य प्रतिष्ठायां कृत्वा सर्वं यथापुरम् ।

***யஜமான: சதுர்வித4புருஷார்த2காமோ யதி3 ப்ராச்யாம் த்3வாரகல்பனம்,த4ர்மார்த2காமோ புருஷார்த2த்ரயம் சேத் பஶ்சிமத்3வார கல்பனம்|த4ர்மார்த2 புருஷார்த2த்3வய காமோ யதி3 உத்தரதி3ஶித்3வாரகல்பனம்,முமுக்ஷு ஶ்சேத் த்3வாரகல்பனம் ச ஈரிதம்| க3ர்ப4க்3ருஹத்3வாராதி3 புரத்3வாராந்தம் தா3ராணி ப்ரகல்பயேத்|***

***கிஞ்ச க3ர்ப4க்3ருஹாதி3 அந்தர்மண்ட3லாவதி4, ஏகத்3வாரகல்பனம்,அந்தர்ஹாராதி3 ரத்2யா வீத்2யந்தம் ஆவரணானாம் தி3க்ஷு த்3வாரத்3வயம் த்3வாரத்ரயம் த்3வார சதுஷ்டயம் நிர்மாணம் குர்யாத்|***

ஒருசில ஆலய முக்கிய த்வாரங்கள் கிழக்கு முகமாகவும், நான்கு பக்கங்களிலும் த்வாரம் வைப்பதன் பலன்கள் **2.**

யஜமானன் தர்மம், அர்த்தம்,காமம், மோக்ஷம் எனும் அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு பேற்றையும் விரும்பினால் ஆலயமுக்கிய த்வாரங்கள் கிழக்கு முகமாக இருக்கலாம், யஜமானன் தர்மம், அர்த்தம், காமம், எனும் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பேற்றையும் விரும்பினால் ஆலயமுக்கிய த்வாரங்கள் மேற்கு முகமாக இருக்கலாம்,

யஜமானன் தர்மம், அர்த்தம், எனும் அறம்,பொருள், என்கிற இரண்டு பேற்றையும் விரும்பினால் ஆலயமுக்கிய த்வாரங்கள் வடக்கு முகமாக இருக்கலாம், யஜமானன் மோக்ஷம் எனும், வீடு என்கிற பேற்றை மட்டுமே விரும்பினால் ஆலய முக்கிய த்வாரங்கள் தெற்கு முகமாக இருக்கலாம். (ஆதாரம் க்ரியாஸுதாப்தி. **6**வது கல்லோலம்)

DRAFT v.s.Jayabal

## 3.9 ஆலயத்தை சுற்றி பல கோபுரங்கள் அமைப்பதற்கு ப்ரமாணம்

इन्द्रादिलोकपालानां पुर: पूर्वादिषु स्थिता: ।

विस्तारायाम मानेन शतयोजनसंमिता: ।।41

पुरी भवति माधोनी नाम्ना चैवामरावती ।

सहस्रगोपुरद्वारप्राकारपरिघाकुला ।। 42 (बृहत् बृह्म संहिता)

என்று இந்த்ராதி லோகபாலகர்களோடும் அவர்களது நகரங்களும், அதைச்சுற்றி ஆயிரக்கணக்கான கோபுரங்களுடனும் வழி, வாசல்களுடனும் கூடிய பட்டணங்கள் இருப்பதைப் போல் ஒரு ஆலயம் அதை சுற்றி பல கோபுரங்கள் இருக்கலாம். அது அந்த தேசத்து அரசனின் செழுமையைக்குறிக்கும். இந்த கோபுரங்களின் ப்ரதிஷ்டையென்பது விமானப்ரதிஷ்டைகள் எப்படி செய்யப்படுகிறதோ அதைப்போலவே செய்ய வேண்டுமென்றும், அந்த கோபுரங்களை த்யானிக்கும் முறைகளும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

DRAFT
V.S.Jayabal

### அந்த ராஜகோபுரத்தின் த்யானம்

तत्र जीवमपि ध्यायेद्व्यापकं तदुपाधिकम् ।

बुद्धिं च पिण्डिकां पादान् अहङ्कारं तथैव च । 49

पादौ पादशिलाजङ्घे गर्भगेहं तथोदरम् ।

स्तम्भान् बाहून् कटिंचापि तथैव कटिमेखलाम् । 50

जिह्वा कर्णं तथा नेत्रं प्रतीपद्याश्च मेहनम् ।

अपानं जलनिर्याणं नासिका नासिका मता । 51

गवाक्षमक्षि ग्रीवा च ग्रीवान् स्कन्धान् कपोलकौ ।

शिरश्च कलशं मांसं प्रलेपं स्पर्शनं सुधाम् । 52

கோபுரம் என்பது ஒருமனிதனின் வடிவம். அந்த மனிதனின் ஜீவனாக இருப்பவன் பரமாத்மா. புத்தி ஸ்தூபிகாகீலம். கால்களின் அடிபாகம் அஹங்காரம் எனும்தத்துவம், பாதங்களாவது - பாதசிலை எனும் ஸ்தானம். அதில் உள்ளத்வாரங்கள் வயிற்றுபாகம். ஜன்னல்கள் கண்கள். தலைபாகம் சிகரம் எனும் ஸ்தூபி. ஒவ்வொரு தூண்களும் கைகள்

அதில் பூசப்படும் சுதை சுண்ணாம்பு சரீரம். கற்கள் போன்றவஸ்துக்கள் எலும்புகள். வர்ணங்கள் நாக்கு. அதில் கட்டப்படும் தர்ப்பை முதலியவைகள் ரோமகூடங்கள். என்பதாக விமானத்தையும் கோபுரங்களையும் பாவிக்கவேண்டும்.

இந்த விமான கோபுரங்கள் **18** அங்கம், **12** அங்கம்,**8** அங்கம் என்பதாகப்பல பிரிவுகள் உண்டு.

இவைகளும் ஒருதேச அரசனின் பொலிவையும் மக்களின் கலை ரசிகத் தன்மையையும் குறிக்கும்.

अस्थीनि च शिलान्तस्था: स्नायुर्दारुशिखाध्वजान्

केशरोमाणि कूर्चं च ध्यायेद्धाम पुमाकृतिम् । 53

द्वादशाङ्गे विमाने तु शक्तिन्यास उदाहृत: । 58

अष्टादशाङ्गसदने हरे: संप्रति कथ्यते ।

DRAFT V.S.Jayabal

कूटे न्यसेन्महालक्ष्मीमपरे वसुधां तथा । 59

शिलायां च महीशक्तिं प्रस्तरे चातिमोहिनीम् ।

स्वाहां वेद्यां श्रियं धाम्नि शक्तिन्यासोऽयमीरित: । 60

शान्तिहोमादिसकलं कर्म कार्यं यथापुरम् ।

दिङ्मूर्तीनां च सर्वासां तत्वन्यासादि पूर्ववत्  । 61

ब्राह्मणानां सहस्राणि शतं वाऽपि यथा बलम् ।

भोजयेद्भुक्तवद्भ्योऽपि तेभ्यो दद्याद्धनादिकम्  । 62

विमानपट्टिकायां तु पञ्चविंशतितन्तुभि: ।

बध्नीयात्कौतुकं दिक्षु धाम्न: चतसृषु क्षिपेत्   । 63....


फलं च पूर्ववत्कर्तु: किञ्चिन्न्यूनं चतुर्मुख ।

प्रतिष्ठा गोपुरस्यापि मन्दिरस्येव नाऽन्यथा । 90

प्राकारस्य प्रतिष्ठायां कृत्वा सर्वं यथापुरम् ।

धर्ममन्त्रेण कुम्भस्थवारिणा प्रोक्षयेद् गुरु: । 91

(பாத்மம்-30 அத்யாயம்)



DRAFT
V.C Jayabal

<u>ராஜ கோபுர ஜீர்ண உத்தாரண முறை</u>

प्रासादं तु पुनः कृत्वा प्रतिष्ठाप्य यथा विधि ।95 ।

सम्प्रोक्षणादिकं कुर्यात् देवस्य मुनिपुङ्गवाः ! ।

एवं हि मण्टपे साले गोपुरे माळिकादिके ।96 ।

जीर्णे तत्रस्थिताः सर्वा नीत्वान्यत्र तु देवताः ।..........

(ईस्वर संहिता 19अ)

ஜீர்ணோத்தார ப்ராயஸ்சித்த விதிகளில், ஆலயத்தின் முறைப்படியே கோபுராதிகள் ப்ரதிஷ்டை செய்யவேண்டுமென்றும், அதில் ஏதும் சிதிலங்கள் ஏற்பட்டால் விமானத்திற்கு எப்படி ஜீர்ணோத்தாரம் செய்கின்றோமோ அதைப்போலவே செய்யவேண்டும் என்று உள்ளது.

அடுத்து நித்யோத்ஸவம் செய்யும் போது ஒவ்வொரு த்வாரத்திற்கும் பலிஸாதிக்க வேண்டுமென்றும், அந்த த்வாரகோபுரங்களின் நாயகர்களான அந்த அந்த தேவதைகளுக்கு ஏற்ற கீத, ந்ருத்த,வாத்யங்களைவாசித்து புகழ்ந்து ப்ரஸாதபலி ஸாதித்தால் உலகம் நன்மையடையும் என்றும் க்ரியாகைரவசந்த்ரிகையில் கூறப்பட்டுள்ளது.

अन्तर्हारोपेते धाम्नि तु अन्तर्मण्डलनाम्नि प्रथमावरणे गोपुरोत्तरसाले ओं पुरुषाय, दक्षिणे ओं अच्युताय,तालादीनि पूर्वोक्तानि।आग्नेये ओं हयग्रीवाय बद्धावतालं ऋषभ स्वरं कोळ्ळिरागं सर्वतोभद्र नृत्तं ।

याम्यां ओं संकर्षणाय गान्धारस्वरं कौशिकरागं भृङ्गिणीतालं भेटक नृत्तं । नैऋते ओं वराहाय मध्यमस्वरं नट्टभाषारागं जयतालं, चक्रमण्डलनृत्तं । वारुण्यां ओं प्रद्युम्नाय पञ्चमस्वरं , श्रीरागं, समतालं, कान्तार नृत्तं । वायौ ओं अनन्ताय धैवतस्वरं, कामदरागं, जयतालं, कुट्टिम नृत्तं ।

उत्तरस्य ओं अनिरुद्धाय निषधस्वरं, तक्केशिरागं, भद्रतालं, पृष्ट कुट्टिम नृत्तं । ऐशाने ओं नृसिंहाय धैवतस्वरं, दक्षरागं, ढक्करीतालं, कटिबन्धननृत्तं।अङ्गणे इन्द्रादि पीठिका स्थानेषु,पूर्वे ओं चक्रिणे, षड्जस्वरं, गान्धाररागं, समतालं,विलासनृत्तं।

कौबेर्यां ओं पद्मिने, पृष्टकुट्टिम नृत्तम्, निषदस्वरम् दक्ष रागम्,भद्रतालम् । ऐशाने-ओं वज्रिने, वामजानूर्ध्वनृत्तम्, धैवतस्वरम् । शालापाणि रागम्, ढक्करीतालम् ।

तथोपेन्द्रादयः स्थाप्या महत्यावरणे तथा ।

महीतले मध्यगणा विश्वेशाद्या दिशि क्रमात् ।। 209

जयादयो गोपुराणां बहिर्भूमौ व्यवस्थिताः । என்று தொடங்கி

गृहणन्तु भगवद्भक्ता भूता :प्रासादबाह्यगा :।


बलीरत्र पवित्राश्च , तेषामनुचराश्च ये ।

एवं क्रमाद्बलिं दत्त्वा सर्वेषां पाठयेत्तत :। (पारमे- 15 अ - 877)

ततश्चतुर्थावरणे अन्तरा गोपुरस्य तु ।

என்று பாரமேஸ்வரஸம்ஹிதையில் ஒவ்வொரு ஆவரணங்களிலும் பலிஸாதித்து அவர்கள் செய்யவேண்டிய கார்யங்களையும் எம்பெருமான் நியமிப்பதாக உள்ளது.

DRAFT V.C. Jayabal



Vimana
Dwajastambham
Gopuram
Bali
Peetham
Maha Mandapam
Adhikara
Nandi
Prakaram
Sahasrara
Visuddha
Anahata
Manipura
Swadhisthana
Muladhara
Ajna
Gopuram is the
Feet of the God
Garbhagruham
Akhanda Lingam
Paramatman
Bali Peetham
Antaratma
Bhadra Lingam
Gopuram
Bhutatma
Sthula Lingam
Mula
Lingam
Dwajastambham
Dwaja Lingam
Tattwatma
Mahamandapam
Adhikaranandi
Jivatman
Pati
Manipura
Muladhara
Ajna
Visuddha
Anahata
Swadhishthana
0.25
1.0
1.0
1.0
1.0
2.0
0.25
2.0
0.25

## 3.10. கோபுராதிகள் அபிவ்ருத்தி அடைய ப்ரார்த்தனை

*ப்ராகாரகோபுரவர ப்ராஸாத மணிமண்டபா:.*
*சாலி முத்க திலாதீனாம் சாலாசைலகுலோஜ்வலா*
*(ஜிதந்தா ஸ்தோத்ரம் 6)*

இதனால் எம்பெருமானே, உன்னுடைய ஸன்னதியில் தாந்யங்களும், தனங்களும், ப்ராகார கோபுராதிகளும் மஹோன்னதமாக வளரட்டும் என்று மங்களாசாசனமாகச் சொல்லப்பட்டுள்ளது.

இதன் மூலம் தெளிவுபடுத்துவது என்னவெனில், 'ஒரு ஆலயத்திற்கு ராஜகோபுரம் முக்கியம் என்றும், அது எந்த திக்கிலும் ஏற்படுத்தி ப்ரதிஷ்டைசெய்து பூஜிக்கலாம்'. என்றும் ஸ்ரீபாஞ்சராத்ரம் கூறுகிறது.

அடுத்து ஆலயம்,கோபுரங்கள், விமானம் பிம்பங்கள் போன்றவைகள் பழுதடைந்தாலோ, அல்லது விழுந்துவிட்டாலோ என்ன செய்வது என்பதற்கு விளக்கம்.

1-भगवन् सर्वलोकेश सर्वज्ञ वदतांवर ।

पूर्वोक्त कर्षणादेषु ह्युत्सवान्तेषु कर्मसु ॥ 1

धाम्न: कदाचिद् बिम्बस्य वैकल्ये भेदनेपि वा ।

2- कालान्तरवशात् तेषां बिम्बानामालयस्यच ॥ 408

वैकल्यं यदि जायेत तत्समाधानमुच्यते ।

पूर्वोक्तानां तु बिम्बानां मुख्यामुख्यविभेदत: ॥ 409

3- नूतनैश्चापि संदध्यान्मेलयित्वा शिलादिभि: ॥ 456

DRAFT V.S.Jayabal

पूर्वं विमानं यद्द्रव्यं शिलाद्यन्तरं भवेत् ।

सलक्षणं वा तद्भिन्नं तादृगेव प्रकल्पयेत् ॥ 457

एवं बिम्बे विमाने च पाकस्थाने च मण्डपे ।

गोपुरे वापि साले वा तथा जीर्णे तु कल्पयेत् ॥ 458

மேலே கூறப்பட்டுள்ள விஷயம் ஸ்ரீபாஞ்சராத்ரம் ஸ்ரீப்ரஸ்ன ஸம்ஹிதை 49ம் அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

அதாவது தாயார் எம்பெருமானிடம் கேட்கும் விஷயம். எம்பெருமானே! முன்பு உங்களால் கூறப்பட்ட ஆலயவிஷயங்களில் ஆலயங்களோ, பிம்பங்களோ, கோபுரங்கள் போன்றவைகளோ காலந்தரத்தில் வெகுநாட்கள் ஆகிவிட்டதால் உடைந்துவிட்டாலோ, அல்லது பழுதடைந்துவிட்டாலோ என்னசெய்வது? என்றுகேட்க எம்பெருமானும்

அந்த ஆலயங்களோ, பிம்பங்களோ, கோபுரங்கள் போன்றவைகள் உடனடியாக செப்பனிடவேண்டும். அதேசமயம் முன்பு எந்த எந்த மாதிரியான த்ரவ்யங்கள் உபயொகிக்கப்பட்டு இருந்தனவோ அதைப்போல த்ரவ்யங்களாலேயே செப்பனிடவேண்டும்.என்றும் கூறுகிறார்.

மேலும் புருஷோத்தம ஸம்ஹிதை 3ம் அத்யாயத்தில் எப்போதோ யாரோ கட்டிய ஆலயமானது நம் கண்முன்னெ கீழே விழுந்துவிட்டாலோ அல்லது விழும்படி உள்ள ஆலயத்தை கோபுரங்களை புதுப்பித்தாலோ மிகுந்த புண்ணியத்தைத் தரும் என்று கூறப்பட்டுள்ளது. அதைப்போலவெ மண்ணால்

DRAFT
V.S.Jayabal

செய்யப்பட்ட ஆலயத்தை மரத்தினாலும், மரத்தினால் செய்யப்பட்ட ஆலயத்தை கற்களாலும், கற்களால் செய்யப்பட்ட ஆலயத்தை கருங்கல்லினாலும், கருங்கல்லினால் செய்யப்பட்ட ஆலயத்திற்கு பொன் வேய்வதும் அதாவது சாமான்ய த்ரவ்யங்களாலான ஒருஆலயத்தை உயர்ந்ததானதொரு திரவ்யங்களைக்கொண்டு செப்பனிடுதல் மிகுந்த பாக்யத்தைக் கொடுக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

पतितं पतमानं तु तदात्थपतितं नर:। 17

समुद्धृत्य हरेर्धाम प्राप्नोति द्विगुणं फलम्।

पतितस्यतु य: कर्ता पतितस्य च रक्षिता । 18

विष्णोरायतनस्येह स नरो विष्णुलोकभाक्।

इष्टकानि च यत्तिष्टेद्यावदायतनं हरे:। 19

सकुलस्तस्य वै कर्ता विष्णुलोके महीयते।

स ऐव पुण्यवान्पूज्य इहलोके परत्र च । 20

(पुरुषोत्तम संहिता-3 अ)

*பதிதம் பதமானம் து ததா3த்த2பதிதம் நர:|* *17*

*ஸமுத்3த்4ருத்ய ஹரேர்தா4ம ப்ராப்னோதி த்3விகு3ணம் ப2லம்|*

*பதிதஸ்யது ய: கர்தா பதிதஸ்ய ச ரக்ஷிதா |* *18*

*விஷ்ணோராயதனஸ்யேஹ ஸ நரோ விஷ்ணுலோகபா4க்|*

*இஷ்டகானி ச யத்திஷ்டேத்3யாவதா3யதனம் ஹரே:|* *19*

DRAFT V.S.Jayabal

*ஸ குலஸ்தஸ்ய வை கர்தா விஷ்ணுலோகே மஹீயதே।*
*ஸ ஏவ புண்யவான்பூஜ்ய இஹலோகே பரத்ர ச ।* *20*

*(புருஷோத்தம ஸம்ஹிதா-3அ)*

**இன்னும் பற்பல அபூர்வமான விஷயங்களைக்கொண்டது ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம்.**

**இந்த ஆகமத்தை கசடறக்கற்பதால் பூவுலகில் சகல சௌபாக்யவாழ்வு வாழ்ந்து முடிவில் பெருநிலம் எனும் வைகுந்தவாழ்வும் பெறலாம்.**

DRAFT

### குறள் 6:



**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

மு.வரதராசன் விளக்கம்:

**ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.**

